இலங்கை திறந்த பல்கலைக்கழகம் The Open University of Srilanka
மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் பீடம் Faculty of Humanities and Social Sciences

887

தமிழ் மற்றும் தமிழ்மொழி கற்பித்தலில் சிறப்புக் கலைமாணி - 2022/2023
Bachelor of Arts (Honors) in Tamil and Tamil Language Teaching - 2022/2023
இறுதிப்பரீட்சை (Final Exam) – 2023/2024
மட்டம் (Level) - 04 பருவம் (Semester) - 01

**LEU4315- இடைக்காலத் தமிழ் இலக்கியம் (Midvale Tamil Literature)**

காலம் : மூன்று (03) மணித்தியாலங்கள்
Three (03) Hours

திகதி : 02.11.2024
Date : 02.11.2024

நேரம் : மு.ப.9.30 – பி.ப.12.30
Time : மு.ப.9.30 – பி.ப.12.30

அறிவுறுத்தல்கள்/Instructions

- தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை நன்கு வாசியுங்கள்
- உங்களுக்குரிய சுட்டெண்ணைத் தெளிவாகக் குறிப்பிடுக
- விடைக்குரிய சரியான வினா இலக்கங்களைக் குறிப்பிடுக
- தரப்பட்டுள்ள ஆறு(06) வினாக்களுள் நான்கு(04) வினாக்களைத் தெரிவு செய்து விடையளிக்குக
- தெளிவற்ற எழுத்துகள், எழுத்துப்பிழைகள், இலக்கணப்பிழைகள் ஆகியவற்றுக்குப் புள்ளிகள் குறைக்கப்படும் என்பதனைக் கவனத்திற் கொள்க

- **Read the given instruction carefully**
- **Please write the correct index Number**
- **Answer only 4 Questions**
- **Mark will be deducted for unclear writing, spelling and grammatical errors**

முக்கிய குறிப்பு (Note) :
உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளின் முன்பக்கத்தின் முடிவுப்பகுதியில் உங்களுக்குரிய சரியான பதிவிலக்கத்தினையும் குறிப்பிடுக.
**At the bottom of the front page in your answer sheet, mention your correct Registration Number.**
பதிவிலக்கத்தினையோ, சுட்டெண்ணையோ பிழையாக எழுதினால் உங்களால் புள்ளிகளைப் பெற முடியாது என்பதைக் கவனத்திற் கொள்க.
**If you write your Registration Number and Index number incorrectly marks will be not obtained.**

தரப்பட்டுள்ள ஆறு (06) வினாக்களுள் நான்கு (04) வினாக்களை மட்டும் தெரிவு செய்து விடை எழுதுக. வினாக்களை முழுமையாக வாசித்து, பூரணமாக விளங்கிக் கொண்டதன் பின்னர் விடைகளை எழுத ஆரம்பிக்கவும்.

1) அ. பல்லவர் காலத்தில் எழுந்த பக்திசார் இலக்கியங்களுள் ஐந்து (05) இனைத் தருக.
(05 புள்ளிகள்)
ஆ. பல்லவர்கால பக்தி இலக்கியங்களின் தோற்றப் பின்னணி குறித்து ஆராய்க.
(20 புள்ளிகள்)

2) அ. உலா பிரபந்தத்தின் கட்டமைப்பைத் தருக.
(05 புள்ளிகள்)
ஆ. 'சோழர்களின் சிறப்பையும் அவர்களின் பெருமைகளையும் அறிந்து கொள்ள மூவருலா கருவியாக அமைகிறது'. இக்கூற்றை ஆராய்க.
(20 புள்ளிகள்)

3) அ. காப்பியம் என்றால் என்ன என்பதை வரையறை செய்க.
(05 புள்ளிகள்)
ஆ. பேரிலக்கியம் - பெருங்காப்பியம் இரண்டிற்குமான வேறுபாட்டைத் தருக.
(05 புள்ளிகள்)

இ. சீவகசிந்தாமணியின் கட்டமைப்பைக் குறிப்பிட்டு, கதையைச் சுருக்கமாகத் தருக. (15 புள்ளிகள்)

4) அ. நாயக்கர்கால இலக்கியப் பண்புகளில் பொருள் மரபைப் பட்டியற்படுத்துக. (05 புள்ளிகள்)

ஆ. பட்டியற்படுத்திய பொருள் மரபுகளுள் **ஐந்து (05)** இனைத் தெரிவு செய்து உதாரணங்களுடன் விளக்குக. (20 புள்ளிகள்)

5) அ. அடிநிலை மக்கள் இலக்கியம் என்றால் என்ன? (05 புள்ளிகள்)

ஆ. பள்ளு இலக்கியத்தின் பண்புகளைத் தருக. (05 புள்ளிகள்)

இ. முக்கூடற்பள்ளின் சிறப்பை ஆராய்க. (15 புள்ளிகள்)

6) பின்வருவனவற்றுக்கு சிறுகுறிப்பு எழுதுக.

அ. சங்கமருவியகால அறஇலக்கியப் பின்னணி

ஆ. பல்லவர்கால பக்தி இயக்கத்தின் செயற்பாடுகள்

இ. நந்திக் கலம்பக நூலின் பண்புகள்

ஈ. காளமேகப் புலவர்

உ. கலிங்கத்துப் பரணி

(5X5=25 புள்ளிகள்)

- முழுப்பதிப்புரிமையுடையது -